18.06.2026 பி.வா.சா.3 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.139 /2014 ) திருமதி.வித்தியாதேவி.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1) இந்த வழக்கின் 2ம்பிரதிவாதி காளிமுத்து எனது தகப்பனார் என்றால் சரிதான். 23ம்பிரதிவாதியான வில்வக்கனி என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். மைனர் கார்த்திக் எனது தம்பி என்றால் சரிதான். தற்போதும் மைனராக இருந்து வருகிறார் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை தான் என்னுடைய எதிர்வழக்குரையாக ஏற்றுக்கொள்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எதுவரை படித்துள்ளேன் என்றால் எம்.பி.ஏ.வரை படித்துள்ளேன். எனது தகப்பனார் பிராது 5வது அயிட்டச்சொத்தை கிரையம் பெற்ற போது புஞ்சை நிலமாக தான் இருந்தது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிரையப்பத்திரத்திற்கு முன்பத்திர ஆவணங்களின் எண்கள் 01.09.1989 ம் தேதிய ஆவண எண்.2446/1989, 19.08.1996 ஆவண எண்.3099/1996 தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது தகப்பனார் இந்த சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை பெற்ற விவரம் தெரியுமா என்றால் ஆமாம். சட்டக்கருத்துரையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவது போல் சட்டக்கருத்துரையை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் 3வது பாரா 2வது வரியில் இனாம்மணியாச்சி கிராமம் சர்வே எண்.59/5ல் கண்ட14 செண்டு நிலம் ஆதியில் இனாம்மணியாச்சியை சேர்ந்த நாராயணசாமி குடும்பத்திற்கு அனுபவிக்கப்பட்டு வந்தது என்று கூறியுள்ளதில் நாராயணசாமி நாயக்கரின் தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இனாம்மணியாச்சியை சேர்ந்த கொண்டுசாமி நாயக்கர் குமாரர் நாராயணசாமி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். கொண்டுசாமி குமாரர் நாராயணசாமி என்பதற்கு ஆதரவாக ஆதார ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

2) எனது தகப்பனார் சண்முகவேலிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் அசலை இந்த வழக்கில்தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் கண்ட சாட்சியாக கையொப்பம் செய்தவர்களை எனது தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் சரிதான். ஆதியில் பிராது தபசில் கண்ட சொத்து அனைத்தும் அய்யப்ப நாயக்கர் குமாரர் நாராயணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும் அதன்பின்னிட்டு நாராயணசாமி நாயக்கர் காலத்திற்கு பின்பு நாராயணசாமி நாயக்கரின் வாரிசுகள் மற்றும் உடன்பிறந்தவர்கள் ஏற்படுத்திக்கொண்ட 1962 ஆம்ஆண்டு வாய்மொழி பாகத்தின்படி சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் வாதிகளின் முன்னோரான நாராயணசாமி நாயக்கரின் பெயர் ஒற்றுமையை வைத்து பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணங்கள் மோசடியானது என்றாலும் வாதிகளின் அனுபவத்தினை பிரதிவாதிகள் 2013 ஆம்வருட இறுதியில் இடைஞ்சல் செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.06.2026.